**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 1, Special Issue - 1, January 2022** **E-ISSN: 2583-0481**

# Personality of Devotion in *Paraparakkanni*

**V. Selvi,** Assistant Professor of Tamil, Wavoo Wajeeha Women's College, Kayalpatnam, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-4930-2419**
**DOI: 10.5281/zenodo.6620963**

## Abstract

*There is an eternal question that human life is a mixture of pleasure and pain. The unfulfilled desire of man manifests as evil qualities. God cannot be seen by evil qualities. The burials of evil emotions are essential for the elimination of evil qualities and the development of supernatural qualities. The burial of the vices is the beginning of seeing the lord. "Paraparakanni' suggests that the human mind becomes a holy one when one worships God. When he knows that God is the beginning of this world, he becomes entirely the holy of the holies. The article traces the personality of devotion as evinced in "Paraparakanni".*

**Keywords:** Personality, Burial, Super Natural, Pleasure, Manifests, God, Human, Pain.

## References

[1] Parabarakkanni- Thayumanavar.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# பராபரக்கண்ணியில் பக்தியின் ஆளுமை

**வி.செல்வி,** உதவிப்பேராசிரியர், வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி, காயல்பட்டணம், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-4930-2419
DOI: 10.5281/zenodo.6620963

**ஆய்வுச்சுருக்கம்**

*மோட்ச வீட்டின் தலைவனாகிய இறைவனை அடையவும், அவனருள் பெற்று இன்புற்று வாழ்வதே மனித வாழ்வின் பயனாகும் என்பதை, பக்தி இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றது. பக்தியைப்பற்றிக் கூறுகையில், பக்தன் இறைவன் மீது அன்பு கொள்வதற்காகவே பிறர்மீது அன்பு கொள்கிறான் என்றும், இதுவே வாழ்வின் நடைமுறையாகும் என்றும் கூறுகிறது. அன்பு என்பதற்கும் பக்தி என்பதற்கும் வேறுபாடுகள் உண்டு. அன்பு – பிறர்மீது செலுத்துவது. பக்தி - ஆண்டவன் மீது செலுத்துவது. அப்பக்தி, நம்மை ஆளுகை செய்வதற்கு வேண்டிய பண்புகளாகும்.*

**திறவுச்சொற்கள்:** ஆளுமை, இறைவன், இயற்கை, மனிதன், வலி.

**முன்னுரை**

பக்தி என்பது புறந்தூய்மை மட்டுமல்ல. தனது உள்ளத்து மாசுகளைத் துடைத்துத் தூய மனதுடன் இறைவனை வழிபட வேண்டும். மோட்ச வீட்டின் தலைவனாகிய இறைவனை அடையவும், அவனருள் பெற்று இன்புற்று வாழ்வதே மனித வாழ்வின் பயனாகும் என்பதை பக்தி இலக்கியங்களும் எடுத்துரைக்கின்றது. பக்தியைப் பற்றிக் கூறுகையில், பக்தன் இறைவன் மீது அன்பு கொள்வதற்காகவே பிறர்மீது அன்பு கொள்கிறான் என்றும், இதுவே வாழ்வின் நடைமுறையாகும் என்றும் கூறுகிறது. அன்பு என்பதற்கும் பக்தி என்பதற்கும் வேறுபாடுகள் உண்டு. அன்பு - பிறர்மீது செலுத்துவது. பக்தி - ஆண்டவன் மீது செலுத்துவது. அப்பக்தி, நம்மை ஆளுகை செய்வதற்கு வேண்டிய பண்புகளை, ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பக்தியின் ஆளுமை**

தமிழ் இலக்கியத்திலும், ஆன்மீக வாழ்விலும், சிறந்து விளங்கியவர் தாயுமானவர். தாயுமானவரிடம் காணப்படும் சிறப்புத் தன்மைகளாகப் பலவற்றை விரித்துக் காட்டலாம் தாயுமானவரின் பக்தியில் ஆளுமை பற்றி எடுத்துக்கூற விழையும் இக்கட்டுரை அவர் எழுதிய கண்ணி வகைகளாலேயே சான்று காட்டப்பட்டுள்ளது. தாயுமானவர் வாழ்ந்த காலம் சித்தாந்தமும், வேதமும் மோதிய காலம். இவ்விரு தத்துவங்களுக்கு இடையிலும், மக்கள் அவதியுற்ற போது "சமரசம்" என்னும் புதிய கோட்பாட்டை உருவாக்கியவர். அவர் சித்தி பெற்ற பின்னரே அதனைப் பயன்படுத்தி முக்தி அடைய முடியும் என்னும் கொள்கை உடையவர். முக்தி பெறும் வரை உடலைப் பாதுகாத்து, சித்தி பெறுதல் வேண்டும் எனக் கூறுகிறார். மனித வாழ்க்கை, இல்வாழ்கை, துறவு வாழ்க்கைஎன்ற அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இவ்விரு வாழ்க்கையும், ஆன்ம நிறைவோடு இறைவனை அடைய வேண்டும் என்ற கோட்பாட்டை உள்ளடக்கியது. துறவு வாழ்க்கை ஒற்றையடிப் பாதையில் இறைவனை அடைய முடிகிறது. ஆனால் இல்வாழ்க்கை பல்வேறு கிளைப்பாதைகளைக் கொண்டு விளங்குகிறது. தாயுமானவ சுவாமிகள் நிலையான இன்பம் என்பது, இறைவனை அடைவதில்

தான் இருக்கிறது என்ற உண்மையைத், தன் வாழ்க்கையின் மூலம் உணர்ந்தார். அதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்தார். பக்தியே சிறந்த வழிபாடு என முடிவு செய்து பக்தியில் ஆளுமையை வளர்த்ததால் தான் இறைவனைக் கண்டறிந்தார். ஒரு மனிதனைப் பக்தி ஆளுமை செய்வதற்கு, தீயதை விட்டு விட்டு, நற்பண்புகளைத் தொடர்ந்தால், தாமும் பக்தி நெறியின் மூலம் வீடுபேற்றை அடையலாம் என்பதை வலியுறுத்துகிறார்.

**வாழ்க்கையின் குறிக்கோள்**

மனித வாழ்க்கை என்பது உண்பதும், உறங்குவதும் மட்டும் அன்று. இறைவனை நினைத்து, இன்பக் கூத்தாடிப் பேரின்பம் அடைய வேண்டும். இம்மை நாட்களில் பிறருக்கு நன்மைகள் பல செய்து, வாழ்வைப் பயனுள்ளவையாக ஆக்கல் வேண்டும் என்பதே பக்தியின் குறிக்கோளாகும்.

**தன்னை அறிந்தால் தலைவன்மேல் பற்று அலது**
**பின்னே ஒரு பற்றும் உண்டோ பேசாய்பராபரமே (கண்ணி:94)**

மனிதர்களுக்கு தன்னை யார்என்று வஸ்து விசாரம் செய்வது,வாழ்க்கையின் தலையாய குறிக்கோள் ஆகும் என்றும், மானுடவாழ்வு கப்பல் பயணத்திற்குஒப்பானது.கப்பலானது நாடியகரையைச் சென்று அடைவது போன்று மானுட ஜீவிதம்,பிறவிப்பெருங்கடலைத் தாண்டி இறைவனது திருவடி என்னும் கரையை எட்டவேண்டும்.

**ஒப்புஉயர்வுஒன்று இன்றி ஒலிபுகா மோனவட்டம்**
**கப்பலுக்குசஅம் வான்பொருள் நீகண்டாய் பராபரமே (கண்ணி: 115)**

ஜீவபோதத்தை அமைதியாக பரமோதமாக மாற்றுவது வாழ்வின் சிறந்த குறிக்கோள் என்பதைத் தெளிவுபடுத்துகிறது இக்கண்ணி. பிரபஞ்சவாழ்வு முற்றிலும் பயனற்றது. முக்தி அடைவதே ஜீவாத்மாவின் குறிக்கோள் என்பதை உணர்த்துகிறது மற்றுமொறு கண்ணி.

**ஞாலத்தைமெய்யெனவே நம்பிநம்பி நாளும் என்தன்**
**காலத்தைப் போக்கிளன்ன கண்டென் பராபரமே(கண்ணி: 184)**

மெய்ப்பொருளை அறிவதற்கு மூன்று பிரமாணங்கள் இருக்கின்றன. அவை முறையே சுருதி, பரகதி, அனுபவம் எனப்படுகின்றன. இம்மூன்றனுள் அனுபவம் அல்லது அனுபூதி தலையாயது. புரம்பொருளை அனுபூதியில் அறிந்துகொள்ளுதலே வாழ்க்கையின் குறிக்கோளாகும் என்பதைத் தெரிவிக்கிறது இக்கண்ணி.

**உள்ளபடி ஒன்றை உரைக்கின் அவர்க்கு உள்உறவாய்க்**
**கள்ளம்இன்றி அன்பாய்;க் களிப்பேன் பராபரமே (கண்ணி:218)**

இவ்வாறு இறைவனை அடைவதற்குரிய குறிக்கோள்களைப் பற்றி எடுத்துரைக்கிறார் தாயுமானவர்.

**மனம்**

மனம் என்பது மனிதனை, நிம்மதியாக இருக்கவிடாத ஒன்று. இது எந்த வகையிலும் இடையூறுகள் தரக்கூடியது. மனத்தினுள், செந்தீயைப் போன்ற துயரம், ஓயாது உதித்துக் கொண்டிருக்கின்றது. அத்துயரம் உருவெடுக்கும் போது மனிதன் துன்பத்திற்கு ஆளாகிறான். என்பதை இக்கண்ணி வலியுறுத்துகிறது.

**உற்றுநினைக் கில்துயரம் உன்உள்ளே செந்தீயாய்**
**பற்றுநொந்தேன் என்னைமுகம் பார்நீ பராபரமே (கண்ணி:58)**

மனம் என்பது நீர்க்குமிழி போன்றது. வெட்ட வெட்ட அது வளர்ந்துகொண்டே இருந்து கற்பாறைகளைப் பிளந்துவிடும் தன்மையது. அரசமரத்தை அறவே ஒழித்துத் தள்ளுவது இயலாத காரியம்.

**நீர்ப்புற் புதமாய் நினைவுஅருட்கெ நின்றுஅழியப்**

**பார்ப்பது அல்லால் வேறுஒன்றைப் பாரென் பராபரமே(கண்ணி:203)**

அழியும் பொருளின் மீது மனம் எவ்வளவு வேகமாக நாடுகிறதோ அவ்வளவு வேகமாக அழியாத அருளை நாடும்படி மனத்தைத் தூண்ட வேண்டும். அறிவில் தேர்ச்சி அடைந்த பிறகு, இந்த மனத்தை எடுத்துப் ,பரம்பொருள் நாட்டத்தில் பயன்படுத்தி வந்தால், மனிதன் பெறுதற்கரிய பேறுபெறுவான் என்பதை இக்கண்ணி உணர்த்துகிறது

**நீர்க்குமிழ் போல் நினைவுவெளி யாய்க்கரையப்**

**பார்க்கும் இடம் எல்லாம்என் பார்வை பராபரமே (கண்ணி:204)**

இக்கண்ணியில் நீர்க்குமிழி எங்ஙனம் நிலையற்றதோ, அங்ஙனம் உதிக்கின்ற எண்ணமும் நிலையற்றது. ஆனால், எண்ணிக்கையில் அடங்காத எண்ணங்களை, மனம் உண்டு பண்ணிக் கொண்டே இருக்கின்றது. மனமானது தன் இயல்பை இழந்து விடுங்கால் நாம் படைத்துள்ள பார்வை தெளிவள்ளதாகிறது. ஆதலால் மனத்தைக் கரைத்தொடுக்கப் பழகிக் கொண்டால் இறைவனைக் காணலாம். என்ற கருத்தை முன்வைக்கின்றது. மனிதன் படுகிற இன்ப துன்பங்களுக்கு ,மனமே காரணமாகிறது. நல்ல விருத்தி மனிதனை இன்பத்தில் ஆழ்த்துகிறது. இச்சையினால் தூண்டப்பட்ட கெட்ட விருத்தி, மனிதனைத் துன்பத்தில் ஆழ்த்துகிறது என்பதை,

**இன்ப நிருவிகற்பம் இன்றேதா அன்றுஎனின்**

**துன்பம் பொறுப்புஅரிது சொன்னேன் பராபரமே (கண்ணி:352)**

மனம் ஓய்ந்து இன்புற்று இருப்பதே மனிதனுடைய நிஜநிலை என்னும் கோட்பாடு இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

**ஆசை**

மனத்தின் அடங்காத்தன்மையாக ஆசைகள் இருக்கின்றன. தடைப்பட்ட ஆசை சினமாக வடிவெடுக்கிறது. ஆசைநல்லதாக இருக்கலாம், அல்லது கெட்டதாக இருக்கலாம். ஆதற்குப் பங்கம் வரும்பொழுது மாளாத கோபமாக வடிவெடுக்கின்றது. ஆசையிருக்கும் வரையில் சினமும் இருப்பது உறுதி. ஆசையையும் சினத்தையும் ஒதுக்குவதற்கு ஏற்ப, மனமானது நல்ல மனமாக திருத்தி அமைகிறது என்பதை,

**சினம்இறக்கக் கற்றாலும் சித்திஎல்லாம் பெற்றாலும்**

**மனம்இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே (கண்ணி:169)**

ஆசை என்னும் சூரனைச் சம்காரம் செய்துவிட்டு ஜீவன் பரத்தில் ஒன்றுபட வேண்டும். என்பதேஇக்கண்ணியின் கருத்தாகும்.

துறவுநெறியினைப் பின்பற்றுபலர்கள் யாவரும் பெண்ணாசையை அறவே விட்டொழிக்க வேண்டும் என்றும், தேசாபிமானத்தை விட்டொழித்தவர்களே, சுத்தர்கள் எனவும் நல்ல துறவியர் எனவும் உணர்த்துகிறது இக்கண்ணி.

**நித்திரையில் செத்தபினும் தேடும்உற்கு இச்சைவையாச்**

**சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே (கண்ணி:197)**

ஆசை பூணுவது, உயிர்கள் அனைத்துக்கும் பொதுவானது. உலக உயிர்கள் அனைத்தும் ஏதோ ஒன்றின் மீது மட்டுமே இருக்க வேண்டும். பரம்பொருள் ஆசையை வளர்த்து வருகின்றவர்கள் பிறவிப் பெருங்கடலின் எல்லையைக், கடக்கமுடியும் எனக் கூறுகிறது இக்கண்ணி.

**ஆசை உன்மீது அல்லால் அருள்அறிய வேணும் ஒன்றில்**
**பிசம்வையேன் நின்கருணைப் பாங்கால் பராபரமே (கண்ணி:239)**

உலக ஆசையும்,கடவுளை அடையவேண்டும் என்னும் ஆசையும், ஒன்றோடொன்று தொடர்பு கிடையாது. உலக ஆசை, மனிதனை இன்ப துன்பங்களுக்கு ஆட்படுத்துகிறது. ஆசை அதிகரிப்பதற்கேற் பசஞ்சலமும் உண்டாகிறது. மனஅமைதி கலைகிறது.

**நேசத்தால் நின்னை நினைக்கும் நினைவுஉடையார்**
**ஆசைக் கடலில் அழுந்தார் பராபரமே (கண்ணி:307)**

மனிதன் உலக ஆசைகளை ஒடுக்கி தெய்வீக ஆசையை வளர்த்துக்கொள்வானாகில், மனிதப்பிறப்பு மேன்மையாக அமையும் என்பதை இக்கண்ணி உணர்த்துகிறது.

**கட்டுப்பாடு**

கட்டுப்பாடு என்பது தோட்டத்தில் பாத்திகட்டி வாய்க்கால் வழியாகத் தண்ணீர் வீணாவதில்லை. அதுபோல நாம் கட்டுப்பாடாக இருக்கும்போது நம் மனத்தின் எண்ணங்களும், உலக இன்பங்களை விட்டு, இறைவனிடத்து நம் மனத்தைத் திருப்புவதற்கு வழிவகுக்கும்.

**கட்டும் கனமும்அந்தக் காலர்வரும் போதுஎதிர்த்து**
**வெட்டும் தளமோ விளம்பாய் பராபரமே (கண்ணி:283)**

மண்ணுலகில் வாழ்ந்திருக்கப் போவதாக மனதில் மனக்கோட்டைக் கட்டி தன்னை ஏதும் அணுகாதவாறு பாதுகாப்பதற்குக் கட்டுப்பாடுகளை நிர்ணயித்துக் கொள்கிறான். ஆனால், எமன் உயிரைக்கவர வரும்போது எந்தக் கட்டுப்பாடும் அவனை அணுகமுடியாது. மாறாக புறத்தோற்றத்தில் கட்டுப்பாடுகளை விதிப்பதைவிட அகத்தில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இறைவனைப் பின்பற்றினால் நற்கதி அடையலாம்.

**ஆணவம்**

மனிதன் “நான்”, “எனது” என்ற எண்ணத்தை நிலைநாட்டுதல் மனித இயல்பு. பேரின்ப நிலையில் ஆணவம் என்பது ஒன்றுமில்லாததாகிறது. இறைவனை அடைய வேண்டும் என்ற எண்ணம் உடையவன், ஆணவம் கொண்டிருக்கமாட்டான். அது அவனை, அழிவுக்கு அழைத்துச் செல்லும் என்பதை இக்கண்ணி வலியுறுத்துகிறது.

**நான்நான் எனக்குளரும் நாட்டத்தால் என்னைவிட்டுப்**
**போனாலும் உன்னைவிட்டுப் போகேன் பராபரமே (கண்ணி:256)**

மனிதனைக் கெட்ட வழியில் தூண்டவல்லது ஆணவம். அது பேயோடு ஒப்பிடப்படுகிறது. ஆணவப்பேயை அகற்ற வேண்டுமெனில், கடவுள் வழிபாட்டில் கருத்தைச் செலுத்த வேண்டும் என்ற கருத்தை இக்கண்ணி கூறுகிறது.

**கெட்டவழி ஆணவப்பேய் கீழ்ஆக மேல்ஆன**
**சிஷ்டர் உனைப்பூஜை செய்வார் பராபரமே (கண்ணி:152)**

ஆணவத்தைத் தம் அறிவைக்கொண்டு துரத்தவேண்டும் என்று தாயுமானவர் கூறுகிறார்.

**புடித்ததையே ஸ்தாபிக்கும் பேரா ணவத்தை**

**ஆடித்துத் துரத்த வல்லார் பராபரமே (கண்ணி: 306)**

**ஐம்புலன்**

மனிதன் ஐம்புலன்களின் வழியே, தன்னை அடையாளம் கண்டுகொள்கிறான். ஐந்து பொறிகளுக்கும், ஐந்து புலன்கள் உள்ளன. ஐம்பொறிகளும் குறைவின்றி இருந்தால் மட்டுமே சிறப்பான உடல்நிலை அமைகிறது. ஐம்பொறிகளிலும் கேடு இருந்தால் புறப்பொருளை சரியாகப் புலப்படுத்த முடியாது. ஐம்பொறிகள் எப்படிச் சரியாகச் செயல்படுகிறதோ, அதைப்போல நாமும் செயல்பட்டால், இறைவனைக் காணலாம் என்று கூறுகிறது இக்கண்ணி.

**அறிவிப்பான் நீஎன்றால் ஐம்புலம்க டந்துஅந்**
**நெறிநிற்பார் யாரே நிகழ்த்தாய் பராபரமே (கண்ணி:250)**

ஐம்பொறிகளையும், கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டால் இறைவனுடைய வழிபாட்டில் மனித மனம் ஈடுபட்டு, இறைவனுக்குப் பூஜிக்கிற பூமாலையாக மாறுகிறது என்பதை இக்கண்ணி கூறுகிறது.

**சிந்தனை**

வாய்விட்டுப் பேசாது, மனத்துக்குள்ளேயே எண்ணுகின்ற எண்ணம் “சிந்தனை” எனப்படுகிறது. பேச்சைக் கடவுளுக்கு உரியதாக ஆக்குவது போன்று மனத்தை இறைவனுக்கு உரியதாக ஆக்கவேண்டும். உள்ளத்தில் உதிக்கின்ற எண்ணமெல்லாம், இறைவனைப் பற்றி மட்டுமே இருக்குமாகில், இறைவனுக்கு உரியவனாக மாறுகிறான் மனிதன் என்னும் கருத்தை இக்கண்ணி பதிவு செய்கிறது.

**செப்புவதுஎல்லாம் ஜெபம்நான் சிந்திப்பது எல்லாம்**
**ஒப்புகில் தியானம்என ஓர்ந்தேன் பராபரமே (கண்ணி:119)**

**தொகுப்புரை**

மனித வாழ்வு என்பது இன்பமும் துன்பமும் கலந்தது. மனிதனுடைய நிறைவேறாத ஆசைகளே தீய குணங்களாக வெளிப்படுகின்றன. தீய குணங்களால், இறைவனைக் காண்பது என்பது இயலாத ஒன்று. நல்ல பண்புகளே நற்கதிக்கு வழிவகுக்கும். அத்தகைய நல்ல பண்புகளைப் பெற வேண்டுமாயின் மனம், மொழி, மெய் ஆகியவற்றைச் சீரான ஓட்டத்தில் வைத்துக் கொள்வதின் மூலம், இறைவனைக் கண்டு கொள்ளலாம். இறைவன் அன்பு, அருள், அறிவு மயமானவன். அவனை அடைவதற்கு அவன் அருளே அடிப்படையானது. இறைவன் அருள் கிட்டிவிட்டால் மாயை தானாக மறைந்து விடும். மாயையை மறந்தால், மனிதன், பக்தியில் தன்னை ஆளுகை செய்து கொண்டு, பரமானந்தப் பேரின்பத்தை அனுபவிக்க முடியும்என்று உணர்த்துகிறது தாயுமானவரின் பராபரக்கண்ணி.

**துணை நூற்பட்டியல்**

[1] *பராபரக்கண்ணி*–தாயுமானவர்

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.